**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தியவானிலைத்துறை**

**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை**

**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

***(03.08.2022 முதல் 07.08.2022 )***

***அறிக்கை எண் 061/2022*** ***தேதி.02.082022***

***மாநிலத்தின் கடந்தவார வானிலை***

*தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 28°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 19°செ முதல் 24°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 11°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பரவலாக மழை பெறப்பட்டது.*

***திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை***

| கடந்தவார வானிலை (29.07.2022 முதல் 01.08.2022) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 07.08.2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 29/07 | 30/07 | 31/07 | 01/08 | தேதி | நாள்-1 03/08 | நாள்-2 04/08 | நாள்-3 05/08 | நாள்-4 06/08 | நாள்-5 07/08 |
| 8.8 | 0.4 | 3.5 | 16.9 | மழை (மி.மீ) | 28 | 45 | 30 | 40 | 12 |
| 35 | 33 | 34 | 33 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 30 | 29 | 28 | 28 | 31 |
| 23 | 24 | 23 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 21 | 19 | 19 | 19 | 20 |
| 6 | 6 | 5 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 7 | 7 | 7 | 6 |
| 83 | 90 | 82 | 96 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 80 | 80 | 75 |
| 62 | 96 | 57 | 68 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 60 |
| 6 | 11 | 11 | 16 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 8 | 8 | 10 | 10 | 10 |
| 70 | 230 | 200 | 200 | காற்றுவீசும் திசை | 200 | 180 | 250 | 250 | 230 |

***எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (03.08.2022 முதல் 07.08.2022)***

*வரும் நாட்களில் வானம் பெரும்பாலான மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்து வரும் ஐந்து நாட்களுக்கு மிதமானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது.அதிகபட்ச வெப்பநிலை 28°செ முதல் 31°செ ஆகவும், குறைந்த பட்ச வெப்பநிலை 19°செ முதல் 21°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம்*

சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8 முதல் 10 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை வீசக்கூடும்.

| திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அவினாசி | தாராபுரம் | குடிமங்கலம் | காங்கேயம் | குண்டடம் | மடத்துக்குளம் | மூலனூர் | பல்லடம் | பொங்கலூர் | திருப்பூர் | உடுமலைப்பெட் | ஊத்துக்குளி | வெள்ளக்கோவில் |
| 03-08-2022 | 133 | 154 | 231 | 117 | 158 | 221 | 109 | 151 | 136 | 103 | 247 | 111 | 95 |
| 04-08-2022 | 316 | 280 | 369 | 252 | 304 | 350 | 214 | 329 | 312 | 303 | 381 | 290 | 193 |
| 05-08-2022 | 139 | 138 | 177 | 130 | 147 | 160 | 112 | 148 | 139 | 122 | 174 | 128 | 110 |
| 06-08-2022 | 35 | 32 | 38 | 31 | 34 | 36 | 25 | 36 | 35 | 35 | 38 | 34 | 25 |
| 07-08-2022 | 4 | 6 | 12 | 3 | 7 | 11 | 3 | 6 | 5 | 2 | 13 | 2 | 2 |

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | அடுத்த 5 நாட்களுக்கு மிதமானது முதல் கன மழை எதிர் பார்க்கப்படுபிறது.<br>தொடர்ந்து மழை பெய்து வருவதால் அனைத்துப்பயிர்களுக்கும் போதிய வடிகால் வசதி மேற்கொள்ளவும்.<br>கன மழையினால் கிடைக்கும் அதிகப்படியான மழை நீரினை பண்ணைக்குட்டைகளில் சேமிப்பதன் மூலம் தேவைப்படும்போது மீண்டும் உபயோகிக்கலாம்.<br>மேற்கு தொடர்ச்சி மழையடிவாரங்களில் அதிக மழைக்கு வாய்ப்புள்ளதால் சரிவுக்கு குறுக்காக வடிகால் வசதி ஏற்படுத்தி மண்அரிப்பினை தடுக்கவேண்டும். |
| மக்காச்சோளம் | வளர்பருவம் | பெறப்பட்ட மழை மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி, இறவையில் மக்காச்சோள விதைப்பைத் போதிய வடிகால் வசதியுடன் தொடர வேண்டும்.<br>ஆடிப்பட்டம் மக்காச்சோளத்ததை இறவையில் விதைக்க இது உகந்த காலமாகும். |
| கரும்பு | வளர்பருவம் | கரும்பில் காய்ந்த தோகை உறிப்பது மற்றும் விட்டம் கட்டுவதன் மூலம் 150 நாட்கள் வயதுடைய முன் பருவ கரும்பில் துளைப்பான் பூச்சியின் தாக்கத்தை குறைக்க வேண்டும்.<br>எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி பின்பருவ கரும்பிற்கு மேலுரமாக 90 கிலோ வேப்பம்புண்ணாக்கு கலந்த தழைச்சத்து மற்றும் 37 |

| | | |
|---|---|---|
| | | கிலோ சாம்பல் சத்து உரங்களை இட வேண்டும். |

| | | |
|---|---|---|
| தக்காளி | நாற்றாங்கால் நடவு | நடவு செய்யப்படும் தக்காளியில் மண்ணிலிருந்து பரவக்கூடிய நோய்களைக் கட்டுப்படுத்த ஒரு ஹெக்டருக்கு 2.5 கிலோ ட்ரைக்கோடெர்மா விரிடி உயிர் பூஞ்சாணக்கொல்லியினை 50 கிலோ தொழுஉரத்துடன் கலந்து இடவேண்டும். தக்காளி நடவு செய்யயும் பொழுது மழை எதிர் பார்க்கபடுவதால் பார்களில் நடவு செய்வது உசிதமாகும். |
| கறிவேப்பிலை | | நிலவும் வானிலையால் கறிவேப்பிலையில் இலைப்புள்ளி நோய் தென்படுகிறது. இதைக்கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு கிராம் கார்பன்டசிம் கலந்து தெளிக்க வேண்டும். |
| வாழை | | மழையுடன் காற்றின் வேகம் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்க வேண்டும். நிலவும் வானிலையினால் வாழையில் சிகாடகா இலைப்புள்ளி நோய் வரவாய்ப்புள்ளதால் கண்காணித்து தேவைப்பட்டால் ஒரு லிட்டர் தண்ணீருக்கு கார்பென்டாசிம் 1 கிராம் (அ) மேங்கோசெப் 2 கிராம் (அ) காப்பர் ஆக்சி குளோரைட் 2 கிராம் (அ) குளோரோத்தலனில் 2.5 கிராம் தெளிக்க வேண்டும். |
| தென்னை | | எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி தென்னை மரங்களுக்கு முதல் உரமாக மரம் ஒன்றிற்கு யூரியா 650 கிராம் சூப்பர் பாஸ்பேட் 1 கிலோ, பொட்டாஷ் 1 கிலோ மற்றும் வேப்பம்புண்ணாக்கு 2 கிலோவினை 50 கிலோ எருவுடன் கலந்து இட வேண்டும். தென்னை மரங்களைச் சுற்றிலும் உள்நோக்கிய வட்டப்பாத்தி எடுப்பதால் மழைநீரினை வேர்ப்பகுதியில் சேமிக்க வேண்டும். |
| கால்நடைகள் | | நிலவும் வானிலையில் கறவை மாடுகளில் மடி வீக்க நோய் தென்பட வாய்ப்புள்ளது. எனவே பால் கரக்கும் முன்னும் பின்னும் மடியை 1 சதம் பொட்டாஷியம் பெர்மாங்கனேட் கலவையில் நன்கு கழுவ வேண்டும். பருவமழை ஆரம்பித்துவிட்டதால் அருகில் உள்ள கால்நடை மருத்துவமனையில் ஆடுகளுக்கு துள்ளுமாரி மற்றும் நீலநாக்கு நோய்க்கான தடுப்பூசி போடவேண்டும். மேலும் குடற்புழு நீக்கம் செய்யவேண்டும். மழையுடன் காற்றின் வேகம் அதிகமாக காணப்படுவதால் கோழி கூடாரங்களை சுற்றிலும் சாக்கு பைகளை தொங்கவிட்டு காற்றின் வேகத்தை குறைக்க வேண்டும். |

## குறுஞ்செய்தி

- கன மழையினால் கிடைக்கும் அதிகப்படியான மழை நீரினை பண்ணைக்குட்டைகளில் சேமிப்பதன் மூலம் தேவைப்படும்போது மீண்டும் உபயோகிக்கலாம்.

முதன்மைஅலுவலர் (GKMS)
வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்
த.நா.வே.ப.கழகம், கோவை